Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

CC. No.657/2024

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09-ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | காசாளர் (ஓய்வு) |
| பெயர். | - | கலைமணி | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| த/பெ. | | தணிக்காச்சலம் | சமயம் | - | |
| கிராமம் | - | மணம்பூண்டி | வயது | - | 75 |

09.02.2026

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது மணம்பூண்டியில் வசித்து திருக்கோவிலூர் லஷ்மி விலாஸ் வங்கியில் காசாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். இந்த விபத்தில் இறந்து போன தேன்மொழி எனது தங்கை. கடந்த 19.02.2024 ந் தேதிகாலை சுமார் 10.45 மணியளவில் முருகன்என்பவர் எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது தங்கைக்கு பாம்பே மெக்கானிக் கடைஅருகே ருக்மணி என்ற தனியார் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் தெரிவித்தார்.

2. நான் உடனே சம்பவ இடத்திற்கு வந்தேன். அங்கு விசாரித்த போது எனது தங்கையை திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக கூறினார்கள். பின்பு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சை பலனின்றி அன்று இரவே எனது தங்கை இறந்துவிட்டார். பின்பு மறுநாள் எனது தங்கையின் பிரேதத்தை போலீசார் விசாரணை செய்த போது உடனிருந்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

CC. No.657/2024

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09-ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | மருந்து கம்பெனி |
| பெயர். | - | பிரபு | வட்டம் | - | திருக்கோவிலூர் |
| த/பெ. | | பாண்டுரங்கன் | சமயம் | - | |
| கிராமம் | - | சந்தப்பேட்டை | வயது | - | 43 |

09.02.2026

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது சந்தப்பேட்டையில் வசித்து மருந்து கம்பெனி வைத்து நடத்தி வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன தேன்மொழி எனது தங்கையின் மாமியார். கடந்த 19.02.2024 ந் தேதிகாலை சுமார் 10.45 மணியளவில் எனது தங்கை எனக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பாம்பே மெக்கானிக் கடைஅருகே ருக்மணி என்ற தனியார் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் தெரிவித்தார்.

2. நான் உடனே சம்பவ இடத்திற்கு வந்தேன். அங்கு விசாரித்த போது எனது தங்கையின் மாமியாரை திருக்கோவிலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக கூறினார்கள். பின்பு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சை பலனின்றி அன்று இரவே எனது தங்கை இறந்துவிட்டார். பின்பு மறுநாள் எனது தங்கையின் மாமியாரின் பிரேதத்தை போலீசார் விசாரணை செய்த போது உடனிருந்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

CC.No.657/2024

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09-ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | ஆனந்தன் | வட்டம் | - | திருக்கோவிலூர் |
| த/பெ. | | பாண்டியன் | சமயம் | - | |
| கிராமம் | - | குலதீப மங்கலம் | வயது | - | 37 |

09.02.2026

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது சந்தப்பேட்டையில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன தேன்மொழி எனது உறவினர். அவர் இறந்துவிட்டார் என்று தெரிந்து மருத்துவமனைக்கு செல்லும் வழியில் போலீசார் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு நான் சாட்சியாக இருந்து தயார் செய்த பார்வை மகசரில் கையெழுத்து போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும்.** போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

1. அ.சா.1 எனது மாமா மகன். இறந்த தேன்மொழி எனது மாமா மனைவி. நானும் அதே ஊரா என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை நடந்த போது காவல் நிலையம் வந்னோ என்றால் ஆமாம். போலீசார் காவல் நிலையத்தில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் அங்கு வாங்கவில்லை, டிராயிங் போட்ட இடத்தில் எழுதினார்கள், கையெழுத்து போட்டேன். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும்.

2. நான் கையெழுத்திட்ட பேப்பரில் எழுதிய விவரத்தை போலீசார் படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பித்தார்கள். என்னுடன் கையெழுத்து போட்டவர் பெயர் சண்முகம்.

நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் கையெழுத்து போடவில்லை என்றும், அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது கையெழுத்து போட்டுவிட்டு, சம்பவ இடத்தில் போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

CC.No.657/2024

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09-ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 7-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. M. சூர்யா, இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 7 | தொழில் | - | அரசு கேபிள் ஆப்ரேட்டர் |
| பெயர். | - | சண்முகம் | வட்டம் | - | திருக்கோவிலூர் |
| த/பெ. | | தண்டபாணி | சமயம் | - | |
| கிராமம் | - | குலதீப மங்கலம் | வயது | - | 50 |

09.02.2026

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது சந்தப்பேட்டையில் வசித்து அரசு கேபிள் ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன தேன்மொழி பக்கத்து வீட்டுக்காரர் மற்றும் அத்தை முறை. நான் விபத்து நடந்த இடம் வழியாக சென்ற போது போலீசார் விபத்து நடந்த இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதற்கு நான் சாட்சியாக இருந்து தயார் செய்த பார்வை மகசரில் கையெழுத்து போட்டேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **அந்த பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து அ.சா.. 3 ஆகும்.** போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

1. அ.சா.1 எனது அத்தை மகன். இறந்த தேன்மொழி எனது அத்தை. இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை நடந்த போது காவல் நிலையம் வந்தேனா என்றால் ஆமாம். போலீசார் காவல் நிலையத்தில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் அங்கு வாங்கவில்லை.

2. வரைபடத்தில் எத்தனையாவது கையெழுத்து போட்டேனா என்றால் வரைபடத்தில் போடவில்லை, எழுதியிருந்ததில் முதலாவது கையெழுத்து போட்டேன். நான்

கையெழுத்திட்ட பேப்பரில் எழுதிய விவரத்தை போலீசார் படித்து காண்பித்தார்களா என்றால் இல்லை. போலீசார் போட சொன்னதால் கையெழுத்து போட்டேனா என்றால் ஆமாம், அத்தாட்சிக்காக விசாரணை செய்ய வேண்டும் என்று சொன்னதால் போட்டேன். அ.சா.1 எனது உறவினர் என்பதால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும் போது கையெழுத்து போட்டுவிட்டு, சம்பவ இடத்தில் போட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.